N10/2/ABTAM/SP1/TAM/TZ0/XX/T

88102433

International Baccalaureate®
Baccalauréat International
Bachillerato Internacional

**TAMIL B – STANDARD LEVEL – PAPER 1**
**TAMOUL B – NIVEAU MOYEN – ÉPREUVE 1**
**TAMIL B – NIVEL MEDIO – PRUEBA 1**

Tuesday 2 November 2010 (morning)
Mardi 2 novembre 2010 (matin)
Martes 2 de noviembre de 2010 (mañana)

1 h 30 m

---

TEXT BOOKLET – INSTRUCTIONS TO CANDIDATES

- Do not open this booklet until instructed to do so.
- This booklet contains all of the texts required for Paper 1.
- Answer the questions in the Question and Answer Booklet provided.

LIVRET DE TEXTES – INSTRUCTIONS DESTINÉES AUX CANDIDATS

- N'ouvrez pas ce livret avant d'y être autorisé(e).
- Ce livret contient tous les textes nécessaires à l'Épreuve 1.
- Répondez à toutes les questions dans le livret de questions et réponses fourni.

CUADERNO DE TEXTOS – INSTRUCCIONES PARA LOS ALUMNOS

- No abra este cuaderno hasta que se lo autoricen.
- Este cuaderno contiene todos los textos para la Prueba 1.
- Conteste todas las preguntas en el cuaderno de preguntas y respuestas.



© International Baccalaureate Organization 2010

https://xtremepape.rs/

**பனுவல் A**

## காதல் சின்னம் தாஜ்மகால்

❶ ஆக்ராவில் தாஜ்மகாலுக்கு அருகே அரை கீலோ மீட்டருக்கு இயந்திர வாகனங்கள் செல்லத் தடை! ஆகவே, நான் நடந்தே செல்ல வேண்டியதாயிருந்தது. அனுமதிச்சீட்டுக்கு நின்றபோது ஏதோ பழைய கோட்டை வாசல் போல் தோன்றியது. வாசலைக் கடந்து உள்ளே கால் பதித்தபோதுதான் அற்புதமான காட்சியொன்று கண்ணுக்குப் புலப்பட்டது.

❷ எத்தனை திரைப்படங்களிலும் நிழற்படங்களிலும் பார்த்திருந்தாலும் நேரில் பார்க்கும்போது ஏற்படும் உணர்வே தனிதான்! நீல நிற வானின் பின்னணியில் வெண்பளிங்கு கற்களால் அமைந்துள்ள தாஜ்மகால் நீல நிற வெல்வெட் பட்டுத்துணியில் காட்சிக்கு வைக்கப்பட்டது போன்றிருந்தது. உலக மக்களைத் தன்வசம் கவர்ந்திழுக்கும் இந்தக் காதல் சமாதி யமுனா நதிக்கரையில் அமைந்துள்ளது. ஆனால், நதியில் கணுக்கால் அளவு நீரே ஓடியது. நல்ல வேளை! இந்த அவலத்தைக் காண மன்னன் ஷாஜகான் உயிரோடு இல்லை.

❸ மொகாலய மன்னரான ஜகங்கீரின் ஐந்தாவது மகனான இளவரசன் குராம், போர்க்கலையிலும் அரசியல் மதிநுட்பத்திலும் தன்னிகரற்று விளங்கினான். தன் தந்தை இறந்தபின் தன் சகோதரர்களைப் புறந்தள்ளிவிட்டு மொகாலய மன்னராக முடிசூட்டிக் கொண்டான். “உலகத்தை ஆள்பவன்” என்னும் பொருள்பட ஷாஜகான் என்று சிறப்பித்து அழைக்கப்பட்டான். பட்டத்து இராணியாக மட்டுமல்ல, மந்திரியாகவும் அவனுக்குத் துணைநின்றாள் அவன் காதல் மனைவி மும்தாஜ் பேகம். அதோடு, அரச பரம்பரை வாரிசுகளையும் அவள் பெற்றெடுத்தாள்.

❹ 1631-ஆம் ஆண்டு மன்னன் ஷாஜகானுடன் நிறைமாதக் கர்ப்பிணியாகப் போர்க்களம் சென்ற மும்தாஜ் அங்குத் தனது 14-வது பிள்ளையைப் பெற்ற பிறகு உடல்நலக் குறை ஏற்பட்டு மரணமடைந்தாள். மகாராணியின் இறப்பு மன்னனுக்குப் பேரதிர்ச்சியாய் அமைந்தது. பலநாள் அவன் எவருடனும் பேசாமல் இருந்தான். இரண்டு வருடங்கள் துக்கம் தாளாமல் சோகத்தின் உருவாய்க் காணப்பட்டான்.



https://xtremepape.rs/

❺ தன் காதல் மனைவிக்கு ஒரு நினைவுச்சின்னம் அமைக்கத் தீர்மானித்தான். அரேபிய, பாரசீக, துருக்கிய தேசங்களிலிருந்து கட்டிடக்கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர். கட்டுமானப் பொருள்களும் கொண்டுவரப்பட்டன. தாஜ்மகால் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட இருபது வருடங்கள் ஆயின.

❻ தாஜ்மகாலைக் கண்ட பரவசத்தோடு ஆக்ரா கோட்டைக்குச் சென்ற போது தன் தந்தையையே அவுரங்கசீப்பு சிறை வைத்த கோட்டை இதுதான் என்று ஆர்வத்தோடு சுற்றிப்பார்த்தேன். அவுரங்கசீப்பு வேறு யாருமல்ல! ஷாஜகானின் மகன்தான். தந்தையின் அரசை எதிர்த்தும் தனக்குப் போட்டியாக வந்த சகோதரர்களை வென்றும் கொன்றும் மொகாலயப் பேரரசைக் கைப்பற்றினான் அவன். பிறகு, தந்தையை ஆக்ரா கோட்டையில் சிறை வைத்தான். ஆனால், ஷாஜகான் இறந்தபோது, அவுரங்கசீப்பு தன் தந்தையின் காதலை உலகுக்கு உணர்த்த மும்தாஜ்யின் சமாதியின் அருகே ஷாஜகானுக்கும் சமாதி அமைத்தான்.

உதயம் – ஏப்ரல் 2008 பிரதி, செய்தியாசிரியர் & பதிப்பதிப்பாளர்: திரு என். நடேசன்
ஆஸ்திரல் ஆசியக் குரல் பதிப்பகம், அஞ்சல் பெட்டி: 3170, வீலஸ் ஹல், விக் 3150,
ஆஸ்திரேலியா, பக்கங்கள் 20, 21 & 22



https://xtremepape.rs/

பனுவல் B

## மரணப்பிடியிலிருந்து மீண்ட சிறுவன்

❶ அறுபது அடி ஆழமுள்ள குழிக்குள் தவறி விழுந்த 6 வயது சிறுவன், 3 நாள் மரணப் போராட்டத்துக்குப் பிறகு உயிருடன் மீட்கப்பட்டான். இந்தியாவின் அரியானா மாநிலத்திலுள்ள ஹால்தேரி என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி ராம்சந்தர். இவரின் மகன் பிரின்ஸ், மாலையில் அக்கம்பக்கத்துச் சிறுவர்களுடன் சேர்ந்து வீட்டின் அருகே விளையாடிக்கொண்டிருந்தான். அப்பகுதியில் சில நாள்களுக்கு முன்புதான் 60 அடி ஆழத்துக்கு ஆழ்துளைக் கிணறு ஒன்று தோண்டப்பட்டிருந்தது. ஆனால், தோண்டிய கிணற்றை மூடாமல் அப்படியே விட்டுச்சென்றுவிட்டனர் தொழிலாளிகள்.

❷ இந்நிலையில் அதன் அருகே விளையாடிய சிறுவன் பிரின்ஸ் திறந்திருந்த குழிக்குள் தவறி விழுந்துவிட்டான். இச்செய்தி அறிந்ததும் அவன் பெற்றோரும் கிராமத்தாரும் செய்வதறியாது புலம்பினர். அரியானா மாநிலத்தின் முதல்வருக்குத் தகவல் சொல்லப்பட்டது. உடனே, சிறுவனை உயிருடன் மீட்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் முதல்வர்.



❸ சிறுவன் விழுந்த குழியின் அகலம் வெறும் 16 அங்குலம்தான். இதனால், அதே குழியின் வழியாகச் சிறுவனை வெளியில் கொண்டு வருவது முடியாத காரியமாக இருந்தது. இதைத் தொடர்ந்து ராணுவ பொறியாளர்களின் உதவி நாடப்பட்டது. உடனே, அவ்விடத்திற்குப் பொறியாளர்கள் விரைந்தனர். சிறுவனுக்குத் தக்க முறையில் சிகிச்சையளிக்க ஒரு மருத்துவக் குழுவும் அங்கு முகாமிட்டது. இந்நிலையில் சிறுவனுக்கு மூச்சுத்திணறல் ஏற்படாமல் இருக்க முதலில் குழாய் வழியாகப் பிராணவாயு செலுத்தப்பட்டது. சிறுவன் விழுந்த குழிக்கு அருகே பத்தடித் தூரத்தில் பயன்படாத கிணறு ஒன்று இருந்தது. அந்தக் கிணற்றின் வழியே சிறுவன் சிக்கியிருக்கும் ஆழ்துளைக் கிணற்றுக்குச் சுரங்கம் அமைத்துச் சிறுவனை மீட்க முடிவெடுத்தனர் மீட்பாளர்கள்.



https://xtremepape.rs/

❹ இதற்கிடையே குழிக்குள் உள்ள சிறுவனின் நிலையைக் கண்டறிய ஒரு சிறிய புகைப்படக்கருவியைத் துளைவழியே அனுப்பினர். அதில் பெறப்பட்ட தகவலில், சிறுவன் குழிக்குள் உட்கார்ந்த நிலையில் உயிருடன் இருப்பது தெரிய வந்தது. இதையடுத்து அவனுக்குத் தண்ணீர், குளுக்கோஸ், உணவு ஆகியவை அவ்வப்போது அனுப்பப்பட்டன. பெற்றோரும், உறவினர்களும் குழி வழியாகச் சிறுவனோடு பேசி அவனைத் தேற்றினர். சிறுவனும் பதற்றமடையாமல் அமைதியாகக் காணப்பட்டான். சிறுவனுக்கு மேலும் தைரியமூட்ட ஒரு சிறிய மின்விளக்கையும் குழிக்குள் அனுப்பினார்கள்.

❺ இச்சம்பவம் காட்டுத்தீ போல் நாடெங்கும் பரவியது. மீட்புப்பணியை மேற்பார்வையிட மாநிலத்தின் முதல்வர் நேரில் வந்துவிட்டார். ஆழ்துளைக் கிணற்றுக்குள் சிறுவன் இருந்த ஆழம் வரை, பக்கத்தில் இருந்த பயன்படாத கிணற்றில் குழி தோண்டப்பட்டது. பின்னர் அங்கிருந்து சிறுவன் சிக்கியிருந்த ஆழ்துளைக் கிணற்றிற்குச் சுரங்கவழி அமைக்கப்பட்டது. குழிக்குள் சிறுவன் இருந்த இடத்துக்குக் கீழே உள்ள மண் பகுதி மிகவும் மென்மையாக இருந்ததால், சுரங்கம் தோண்டும் பணி மிகுந்த எச்சரிக்கையுடன் மேற்கொள்ளப்பட்டது.

❻ பெரும் முயற்சிக்குப் பிறகு, மீட்புக்குழுவைச் சேர்ந்த ராணுவ வீரர்கள் சுரங்கத்தின் மூலம் சிறுவன் இருக்கும் இடத்தை அடைந்தனர். அவர்களின் உதவியுடன் சிறுவன் சுரங்கம் வழியாக மெதுவாகத் தவழ்ந்தபடி வெளியே வந்தான். உடனே, மருத்துவர்கள் சிறுவனின் உடல்நிலையைச் சோதித்துச் சிகிச்சை அளித்தனர். பிறகு, சிறுவன் பாதுகாப்பாக வெளியே கொண்டு வரப்பட்டான். கூடியிருந்த மக்கள் கைத்தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

செய்தித்தாள் கட்டுரை – வைகை, 28 ஜூலை 2006, திரு ராஜா யோகராஜா, நகட் வர்த்தக மையம், 55, நகட் தெரு, #230Z, ஸ்காப்பிரோ, ON, M1S3L1 pg. 6



https://xtremepape.rs/

பனுவல் C

## மனச்சான்றும் தனிமனித நடத்தையும்

❶ தனிமனிதனை நல்வழிப்படுத்துவதில் மனச்சான்று முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஒருவன் தவறு செய்ய முனையும்போது மனச்சான்று அவனைத் தடுக்கின்றது. நல்ல பண்பு மிகுந்தவன் மனச்சான்றின்படி அறநெறியில் நடக்கிறான். இல்லையேல் நெறி தவறித் தவறு இழைக்கிறான்.

*[ – X – ]*

❷ தனிமனித வாழ்க்கையில் மனச்சான்று வலிமையோடு விளங்குவதை நம்மால் உணர முடிகின்றது. ஆனால், மனிதர் கூட்டமாகச் சேர்ந்து செயலாற்றவோ போராடவோ தொடங்கினால், மனச்சான்று செயலற்றுப் போய்விடுகின்றது. அந்நிலையில் மனிதன் எந்தக் கொடுமையையும் செய்யத் தயங்குவதில்லை. தனியே இருக்கும்போது ஓர் ஆளின் மேல் அல்லது ஒரு வீட்டில் மேல் கல் எறிய முயலாத மனிதன், எல்லோரும் செய்யும்போது தயங்காமல் அத்தவறுகளைச் செய்ய முற்படுகின்றான். இவ்வாறு கூட்டத்தில் இருக்கும் நேரங்களில் மனிதன் எப்படிப்பட்ட கொடூரச் செயல்களும் செய்யத் தயக்கம் காட்டுவதில்லை.

**[ – 19 – ]**

❸ அந்தக் கூட்டம் அரசியலின் பெயராலோ சமயத்தின் பெயராலோ இயங்கும்போது இன்னும் சற்றுத் தைரியமாக ஒருவனை இத்தகைய தவறுகளைச் செய்யத் தூண்டுகிறது. மனச்சான்றை ஒதுக்கிவிட்டு இத்தகைய கொடுமைகள் செய்வதே கடமை என்று எண்ணவும் அவன் பழகிக்கொள்கிறான். இவ்வாறு தனிமனிதனின் இயல்பை அடியோடு அழிக்கவும் மனச்சான்றை முற்றிலும் அடக்கவும் கூட்டத்திற்கு வலிமை உண்டு.

**[ – 20 – ]**

❹ இந்தியாவில் சில ஆண்டுகளுக்கு முன்னே இந்து முஸ்லிம் கலவரம் எழுந்தபோது நிகழ்ந்த கொடுமைகள் இதற்குத் தக்க சான்றாகும். இலங்கையில் நடக்கும் இனக் கலவரங்களையும் இதில் அடக்கலாம். தனிமனிதனாக இருந்து செய்யத் துணியாத கொள்ளை, கற்பழித்தல், கொலைப் பாதகக் கொடுஞ்செயல்களையெல்லாம் கூட்டத்தில் சேர்ந்து மனிதர்கள் செய்வதைக் கண்கூடாகக் காண்கிறோம். இவ்வாறு கூட்டத்தோடு கூடியிருந்து கொடுமை செய்யும் மனிதன் ஒருநாளும் திருந்துவது இல்லை; அரசியல் வெறியும் சமய வெறியும் மனச்சான்றின் குரல் கேளாதபடி செய்துவிடுகின்றன.



https://xtremepape.rs/

**[ – 21 – ]**

❺ இந்தக் காலத்தில் மட்டும் அல்லாமல் பழங்காலத்திலும் இத்தகைய நிலைமை இருந்துவந்திருக்கின்றது. பகைவர் நாடுகளைக் கொள்ளையடிப்பதும், கொளுத்துவதும், பெண்களைக் கவர்ந்து வருவதும், எதிர்ப்பவர்களைக் கொல்வதும் பழங்காலத்தில் தவறாகக் கருதப்படவில்லை; மாறாக, வீரர்களின் கடமையாகக் கருதப்பட்டுவந்தது. இச்செயல்களைப் புலவர்களும் போற்றிப் பாடியுள்ளனர். அவை இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன.

**[ – 22 – ]**

❻ அரசியல் பற்றும் சமயப் பற்றும் எவ்வளவு வளர்ந்தாலும் நன்னடத்தையைப் பேணித் தனிமனிதப் பண்புகளைப் போற்றும் உத்தமர்கள் இடையிடையே தோன்றி உலகை நல்வழிப்படுத்தி வருகின்றனர். புத்தர், இயேசு, காந்தி முதலானனோர் அறநெறி வழுவாமல் வாழ்ந்து காட்டியவர்கள். தனியாகவோ கூட்டத்திலோ இருந்தாலும் மனிதத்தன்மையைப் போற்றிப் பேணுகின்ற பண்பைத்தான் இச்சான்றோர்கள் உலகுக்கு உணர்த்தியுள்ளனர்.

❼ இன்று குடியாட்சி நாடுகளில் இன்றியமையாததாகத் தேர்தல் முறை கடைப்பிடிக்கப்படுகின்றது. இதில் மனச்சான்றை ஒதுக்கிவிட்டுத்தான் பலரும் *[ – X – ]*. அவர்கள் கட்சிக்காகவும் கொடிக்காகவும் எதையும் செய்யத் துணிகிறார்கள். இதனால், தேர்தலில் பல **[ – 23 – ]** நடப்பதைக் காண்கிறோம். கூட்ட உணர்ச்சியால் **[ – 24 – ]** மக்கள் கொடுஞ்செயல்கள் புரிகின்றார்கள். மனச்சான்றை மதிப்பவர்கள் இவற்றை எதிர்க்க **[ – 25 – ]** போய்விடுகிறார்கள். இத்தகைய நிலையில் பல தேர்தல்களில் நல்லவர்கள் ஒதுங்கிநிற்கப் பொல்லாதவர்கள் **[ – 26 – ]** ஓங்கி வளர்கின்றது. இந்நிலையில் மக்கள் நலவாழ்வு பெறுவது அரிதினும் அரிதே.

உலகப் பேரேடு, மு. வரதராசன், தாயக வெளியீடு, பாரி நிலையம், 184, பாரிமுனை, சென்னை, 600108, பக்கங்கள் 134 – 136



https://xtremepape.rs/

பனுவல் D

## பகுதிநேர வேலை பார்க்கும் இளைஞர்கள்

இக்காலத்தில் படிக்கும்போதே வேலை பார்க்கும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. வசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்த சிலர் குடும்பத்தின் பணச்சுமையைக் குறைப்பதற்குப் பகுதிநேர வேலை செய்வது மிகவும் சகஜமாகும். ஆனால், வசதியான குடும்பங்களையும் நடுத்தரவர்க்க குடும்பங்களையும் சேர்ந்த பிள்ளைகளும் இப்போது பகுதிநேர வேலை பார்க்க ஆர்வப்படுகிறார்கள். அத்தகைய இளைஞர்களில் ஒருவர்தான் யவந்திகா. பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு படிக்கும் யவந்திகா பொழுதுபோக்கிற்காகப் பகுதிநேர வேலையில் ஈடுபட்டுள்ளாள்.

நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள்தான் யவந்திகா. அவளின் பெற்றோர் இருவரும் நல்ல வருமானம் ஈட்டுகின்ற தொழிலைச் செய்கிறார்கள். கல்லூரி, வகுப்புகள், நண்பர்கள் என்ற வழக்கமான நடைமுறை அவளுக்குச் சலிப்பை ஏற்படுத்தியதால், படிக்கும் நேரம் போக, எஞ்சியுள்ள ஓய்வுநேரத்தைப் பயனுள்ள வழியில் செலவிட எண்ணினாள். அப்போதுதான், சரளமாக ஆங்கிலம் பேசும் இளைஞர்கள் பன்னாட்டு விரைவு உணவகத்தின் விற்பனைப் பிரிவில் பகுதிநேரப் பணி செய்வதற்குத் தேவை என்னும் விளம்பரத்தை அவள் பார்க்க நேர்ந்தது.

உடனே தம் பெற்றோர்களிடம் அதுகுறித்துப் பேசினாள். தன் விருப்பத்தையும் தெரிவித்தாள். படிப்பைப் பாதிக்கும், கவனம் சிதறிவிடும் எனக் கூறி முதலில் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர் பெற்றோர். ஆனால், பகுதிநேர வேலையில் சேர்வது தனக்கு வாழ்க்கை அனுபவத்தையும் தன்னம்பிக்கையையும் அளிக்கும் எனக் கூறி அவர்களைச் சம்மதிக்க வைத்துவிட்டாள் யவந்திகா.

விற்பனைப் பிரிவில் நாளொன்றுக்கு ஐந்து மணி நேரம் வேலை செய்ய அவளுக்கு மாதம் 400 வெள்ளி இப்போது கிடைக்கிறது. வாடிக்கையாளர்களை வரவேற்று, அவர்களின் தேவையைக் கேட்டுக் குறிப்பெடுத்துச் சமையல் அறைக்கு அனுப்ப வேண்டியது அவளின் வேலையாகும்.



https://xtremepape.rs/

இந்த வேலைக்குப் போவதால், படிக்கும் நேரம் போக ஓய்வு நேரத்தை மிகப் பயனுள்ள வழியில் செலவிடுகிறாள் யவந்திகா. இதன்வழி கிடைக்கும் சம்பளத்தைக்கொண்டு தனக்குத் தேவையானவற்றைத் தன் விருப்பம்போல வாங்கிக்கொள்கிறாள். எதிர்காலத்திற்குச் சேமிக்கவும் தொடங்கிவிட்டாள். எப்போதும் பணத்துக்குப் பெற்றோரை நம்பியில்லாமல் தன்னால் இப்போது சுதந்திரமாக இருக்க முடிகிறது என்று பெருமைப்பட்டுக்கொள்கிறாள் யவந்திகா. சம்பாதிக்கத் தொடங்கியபிறகே அவளுக்குப் பணத்தின் அருமை புரிகிறது. இப்போதெல்லாம் அவள் பணத்தை வீண்செலவு செய்து விரயமாக்குவதில்லை. அவளிடம் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தை அவள் பெற்றோரே கவனித்துப் பாராட்டியுள்ளனர்.

பகுதிநேர வேலை பார்ப்பது குடும்ப கௌரவத்தைப் பாதிக்கிறது என்று பெற்றோர் அவளிடம் சில நேரம் குறைபட்டுக்கொண்டபோது, இது தனக்குப் பொறுப்புணர்ச்சியையும் மனிதர்களைப் புரிந்துகொள்ள வாய்ப்பையும் அளிக்கிறது என்று கூறி விளக்கப்படுத்துகிறாள் அவள். பகுதிநேர வேலை பார்ப்பதால், அவளின் படிப்பு எந்த வகையிலும் பாதிப்படையாமல் இருப்பதில் மிகவும் கவனமாக இருக்கிறாள் யவந்திகா. ஓய்வு நேரத்தில் படம் பார்ப்பது, நண்பர்களிடம் தொலைபேசியில் அரட்டையடிப்பது, கணினியில் விளையாடுவது, தூங்குவது போன்ற பயனற்ற காரியங்களைக் காட்டிலும் இந்தப் பகுதிநேர வேலை அவளுக்கு மிகவும் பயனுடையதாகத் தெரிகிறது. இன்னும் சொல்லப் போனால், இந்த வேலைக்குப் போன பிறகே தான் இன்னும் சிரத்தையுடன் படிப்பதாகப் பெருமைப்பட்டுக்கொள்கிறாள் யவந்திகா.

மூலம்: மஞ்சரி சஞ்சிகை – ஜூன் 2008 – கட்டுரை: இளைஞர்களும் பகுதிநேர வேலையும், ஆசிரியர்: ஆர். நாராயணசாமி, எண்: 1, சமஸ்கிருத கல்லூரித் தெரு, சென்னை, 600004, பக்கங்கள் 69, 71



https://xtremepape.rs/